24-07-2014 Dinathanthi



சென்னை கோயம்பேட்டில் உள்ள மெட்ரோ ரெயில் தலைமை நிர்வாக அலுவலக கட்டிடத்தில் அமைக்கப்பட்டு உள்ள நவீன கட்டுப்பாட்டு மையத்தை படத்தில் காணலாம்.

அக்டோபர் மாதம் மெட்ரோ ரெயில் சேவை தொடக்கம்

# கோயம்பேடு - அசோக்நகர் இடையே சிக்னல் அமைக்கும் பணிகள் நிறைவு

## கட்டுப்பாட்டு அறையும் நவீன தொழில் நுட்பத்தில் அமைக்கப்பட்டுள்ளது

சென்னை, ஜூலை.24-

கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரை அக்டோபர் மாதம் மெட்ரோ ரெயில் பயணிகள் சேவை தொடங்க விருக்கும் நிலையில் கோயம்பேடு முதல் அசோக்நகர் வரை சிக்னல் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது.

### மெட்ரோ ரெயில் திட்டம்

மெட்ரோ ரெயில் சேவைக்காக கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரை 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு பணிகள் நிறைவடைந்து, இறுதி கட்ட சோதனை தொடங்கியுள்ளது. தொடர்ந்து அக்டோபர் மாதம் பயணிகள் சேவை தொடங்கப்பட உள்ளது.

இதுகுறித்து மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:-

### ரெயில் கட்டுப்பாட்டு மையம்

சென்னையில் அமைக்கப்பட்டு வரும் மெட்ரோ ரெயில் சேவைக்காக கோயம்பேட்டில் உள்ள மெட்ரோ ரெயில் தலைமை நிர்வாக அலுவலக கட்டிடத்தில் "ஆப்ரேஷன் கண்ட்ரோல் சென்டர்" (ஓ.சி.சி.) என்ற பெயரில், ரெயில்களை இயக்கவும், கட்டுப்படுத்தவும், கண்காணிக்கவும் கட்டுப்பாட்டு மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மையத்தில் இருந்து அனைத்து மெட்ரோ ரெயில்களையும் தானியங்கி கருவி மூலம் இயக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த மையத்திலிருந்து ரெயில் என்ஜின்களில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருப்பவர்களிடம் தகவல் பரிமாற்றம் செய்வதற்கான வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக 'எல்சிடி' என்ற அகன்ற திரை அமைக்கப்பட்டுள்ளது. இதில் ரெயில் வருகை மற்றும் புறப்பாடு குறித்த தகவல்களை "பீப்" ஒளி-ஒலி மூலம் கண்காணிக்கப்படுகிறது. அத்துடன் இங்கு நிறுவப்பட்டுள்ள தானியங்கிகருவிமூலம்ரெயில்களை இயக்கவும், கட்டுப்படுத்தவும் முடியும். முறையான இந்த ஒருங்கிணைப்பு மூலம் ரெயில்களை பாதுகாப்பாகவும், குறித்த நேரத்திலும் இயக்கலாம்.

### சிக்னல் பணி நிறைவு

இந்த மையம் மெட்ரோ ரெயில் இயக்கத்துக்கு நரம்புகளாக செயல்படும். இங்குள்ள கட்டுப்பாட்டு மையம், ரெயில் நிலையம் மற்றும் ரெயில்களை இணைக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு வினாடியும் ஓடும் ரெயிலை கட்டுப்படுத்தவும், கண்காணிக்கவும் முடியும். இந்த கட்டுப்பாட்டு மையம் நவீன தொழில்நுட்பத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கோயம்பேடு, சி.எம்.பி.டி, அரும்பாக்கம், அசோக் நகர் இடையே சுமார் 5 கிலோ மீட்டர் தூரத்துக்கான தண்டவாளத்தில் சிக்னல் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. தொடர்ந்து பணி நிறைவடைந்த பகுதிகளில் இறுதி கட்ட சோதனை நடந்து வருகிறது.

தற்போது அசோக்நகர் முதல் ஆலந்தூர் வரை சிக்னல் அமைக்கும் பணிகள் வேகமாக நடந்து வருகிறது.

### 44 கடைகள் அகற்றம்

சென்டிரல் ரெயில் நிலையம் அருகில் மெட்ரோ ரெயில் பணிக்கு தேவையான நிலத்தை அரசு ஒப்படைத்துள்ளது. இந்த இடத்தில் ஏராளமான கடைகள் மற்றும் ஓட்டல்கள் இருந்தன. அவற்றை படிப்படியாக அப்புறப்படுத்தி விட்டு மெட்ரோ ரெயில் சேவை பணிகள் நடந்து வருகிறது. இந்நிலையில் நேற்று பூங்கா நகர் ரெயில் நிலையத்திலிருந்து வெளியே வரும் வழியில் இருபுறமும் இருந்த 44 சிறு கடைகள் அகற்றப்பட்டன.

அந்த இடத்தில் இரும்பு தகடுகள் மூலம் வேலி அமைக்கப்பட்டு வெளியாட்கள் உள்ளே வராதவாறு தடுக்கப்பட்டுள்ளது. ஓரிரு நாட்களில் இந்தப் பகுதியிலும் மெட்ரோ ரெயில் சேவைக்கான வேலைகள் தொடங்கப்பட உள்ளது.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.